கேட்க நினைக்கிறீர்கள். முதலமைச்சரவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்தது முறைகேடு இல்லை. இதுதான் உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எனக்குத் தெரியும்.

ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு விவாதம் ஒரு மணிக்கு முடிய வேண்டும். இந்த விவாதம் மானியக் கோரிக்கையின் கடைசி நாள். பேசுகிற உறுப்பினர்கள நிறையப் பேர்கள் பேர் கொடுத திருக்கிறார்கள். பிறகு நேரமில்லை எனறு உறுப்பினர்கள் வருத்தப் படக் கூடாது.

6. கவன ஈர்ப்பு.

திருச்சி மாவட்டம், முல்லையூரில் ஏற்பட்ட தீ விபத்தும், அதனால் பலர் பாதிக்கப்பட்டதும் குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், அரியலூருக்கு அருகில் உள்ள முல்லையூரில் சமீபத்தில் பயங் கரமான தீ விபத்து ஏற்பட்டு பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், முல்லையூர் கிராமத்தில் 21—2—1975 அன்று பிற்பகல் சுமார் 2 மணியளவில் திரு. செங்கன் என்பவருடைய வீடு, அவருடைய குழந்தைகள் சர்க்கரைவள்ளிக் கிழங்கை அடுப்பில் வறுக்கும்போது தற்செயலாக தீப்பிடித்துக் கொண்டது. இத் தீ அருகி லிருந்த வீடுகளுக்கும் பரவியது. இத் தீ விபத்து தகவல் கிடைத்த வடன், ஸ்ரீரங்கத்திலுள்ள தீயணைப்புப் படையினர் விரைந்து அவ்விடத்தை அடைந்து தீயினை அணைத்தனர். 135 குடியிருப்பு வீடுகள் எரிந்து விட் டன. கால்நடைச் சேதங்கள் எதுவுமில்லை. இந்த விபத்தால் சொத்துக் களுக்கு ஏற்பட்ட மொத்த சேதத்தின் மதிப்பு ரூ. 37,950 ஆகும். இத் தீ விபத்தில் 35 வயதுள்ள கல்யாணி (திரு. செங்கோடனின் மனைவி) என்ற பெண்ணும், ஐந்து வயதுள்ள சிறுமி சந்திராவும் (செங்கனின் புதல்வி) இறந்து விட்டனர். இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலா ரூ. 80 வீதம் (ரொக்க மானியம் ரூ. 60ம் உடை மானியம் ரூ. 20ம் 135 குடும்பங்களுக்கு ரூ. 10,800 நிவாரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரின் செய்கையை வருவாய் வாரியம் அங்கீகரித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, முல்லையூரில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தால் இறந்து விட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈட்டுத் தொகை தருவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா? அப் படியானால் விரைவில் நிதி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இது வரையில் அப்படிப்பட்ட தகவல் எதும் வரவில்லை. வந்தால் பிறகு கவனிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த முல்லையூரில் பல வீடுகள் எரிந்துவிட்டபடியால், புதிய வீடுகளைக் கட்டித் தர அரசு ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, கடன் மனுக்கள் வாங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு பரிசீலிக்கப்படும்.

(7) 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்ட மன்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 49,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

THIRU N. DENNIS : Sir, to discuss policy, I move "That the allotment of Rs. 49,61,000 under Demand No. 7—State Legislature be reduced by Rs. 100."

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சட்ட மன்றம் கூடும் நாட்களை அதிகப்படுத்துவது பற்றி விவாதிக்க —

"நிதிக் கோரிக்கை எண் 7—சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 49,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, எதிர்க்கட்சிகளின் லாபியை விரிவுபடுத்தி, கேண்டீனை அருகாமையில் வைப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 7—சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 49,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்